## பொன்னேரி வேலம்மாள் மெட்ரிக் பள்ளியில்

# நவராத்திரி விழா கோலாகலம்



▶ பொன்னேரி பஞ்செட்டி வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நவராத்திரி விழா நடைபெற்றது. இதையொட்டி கொலு வைத்து மாணவிகள் வழிபட்டனர்.

**திருவள்ளூர், அக். 6:** பொன்னேரி பஞ்செட்டி வேலம்மாள் மெட்ரிக் பள்ளியில், நவராத்திரி விழா கோலாகலமாக நடந்தது. விழாவையொட்டி கொலு வைத்து மாணவர்கள் வழிபட்டனர்.

பொன்னேரி பஞ்செட்டி வேலம்மாள் மெட்ரிக்பள்ளியில் நவராத்திரி விழா நேற்று கோலாகலமாக நடந்தது. வேலம்மாள் கல்விக்குழும இயக்குனர் எம்.வி.எம்.சசிக்குமார் தலைமை வகித்தார். பள்ளி முதல்வர் ஜி.ஆர்.சாந்தி முன்னிலை வகித்தார். விழாவில் பள்ளி மாணவ, மாணவியர்கள் நவராத்திரி கொலு அமைத்தும், பக்தி பாடல்கள் பாடி பூஜைகள் நடத்தியும் வழிபட்டனர். தொடர்ந்து, ஸ்லோகங்கள் கூறியும், இந்து கடவுள்கள் குறித்து சொற்பொழிவு ஆற்றியும் மாணவர்கள் தங்களது திறனை வெளிப்படுத்தினர். பின்னர் பிரசாதம் வழங்கப்பட்டது. விழாவில் பள்ளி துணை முதல்வர், ஆசிரியர்கள், ஆசிரியைகள், மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.